தினமலர்

# ஜிப்மரில் கண் மருத்துவ கருத்தரங்கு



ஜிப்மர் கண் மருத்துவத்துறை சார்பில் கண் அழுத்த நோய் வாரவிழாவை முன்னிட்டு ஆப்டோமெட்ரி மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடந்தது.

**புதுச்சேரி, மார்ச் 20–**

ஜிப்மர் கண் மருத்துவத் துறை சார்பில் கண் அழுத்த நோய் வாரத்தை முன்னிட்டு ஆப்டோமெட்ரி மாணவர்களுகான சிறப்பு கருத்தரங்கம் நடந்தது.

ஜிப்மர் கண் மருத்துவத்துறை 'உலகம் அழகானது, அதைக் காண உங்கள் பார்வையை பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்ற தலைப்பில் உலக கிளக்கோமா (கண் அழுத்த நோய்) வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதன் ஒருபகுதியாக, ஆப்டோமெட்ரி மாணவர்களுக்கான சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. இதில், மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி, பிரிஸ்ட் பல்கலைக் கழகம், ஆறுபடை வீடு மருத்துவக் கல்லூரி மற்றும் புதுச்சேரி பல்கலைக் கழக சமூகக் கல்லூரியின் சார்பில் 170 ஆப்டோமெட்ரி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில், ஜிப்மர் கண் மருத்துவத்துறை தலைவர் நிருபமா கஸ்தூரி வரவேற்றார். புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குனர் ஸ்ரீராமுலு, மாணவர்களுக்கு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், நோய்க்கான ஆபத்தில் உள்ளவர்களை பரிசோதிப்பதன் முக்கியத்துவத்தையும், நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆப்டோமெட்ரிஸ்ட்களின் பங்களிப்பு குறித்து விளக்கம் அளித்தார்.

இதில், கிளக்கோமா பரிசோதனையின் ஒரு அங்கமான பெரிமெட்ரி என்று அழைக்கப்படும் பக்கப் பார்வை பரிசோதனை பற்றிய விழிப்புணர்வுவீடியோ காண்பிக்கப்பட்டது. கிளக்கோமா பற்றிய நாடகம், நோயறிதல் மற்றும் மேலாண்மை பற்றி விரிவுரைகள் இடம் பெற்றன.